


# பச்சையா? நீலமா?


அனுஷா ஸ்ரீதரன்
(ஆத்ம போதா)


STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics

4.1


STEM-Kalvi Charity



ஆண்டாள் குளம் பாடசாலை விழாக்கோலம் பூண்டிருந்தது. அன்று புதிய விஞ்ஞான ஆய்வுகூட திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.



இவ்விழாவுக்கு பழையமாணவன்
வைத்தியர் சுந்தரை பிரதம அதிதியாக
கலந்து கொள்ள அழைத்திருந்தார்கள்.



வைத்தியர் சுந்தர் மோட்டார் வண்டியில் தனது வீட்டிலிருந்து பாடசாலை நோக்கி சென்று கொண்டிருந்தார். அவர் 30 வருடங்களுக்கு முன் நடந்த ஒரு சில சம்பவங்களை ஞாபகப்படுத்திக் கொண்டார்.......



சுந்தர் தனது பெற்றோருடன் ஆண்டாள்குளம் பாடசாலை அதிபரின் அறையில் காத்திருந்தான். அவன் இப்பாடசாலையில் சேர்ந்து படிப்பதற்காக வந்திருந்தான்.

சற்றுநேரத்தின் பின் ஆசிரியர் ஒருவர் அறைக்குள் வந்தார். அவர், சுந்தரிடம் நிறம் தீட்டப்பட்ட கடதாசிகளைக் காட்டி, நிறத்தின் பெயர்களைக் கூறுமாறு கேட்டார். சுந்தரும் பதிலளித்தான்:



"கருப்பு"



"நீலம்"



“சிவப்பு”



“பச்சை”

இத்துடன் ஆசிரியர் சோதனையை நிறுத்திவிட்டு அதிபரோடு கலந்தாலோசித்தார்.



சில நிமிடங்களுக்கு பின்னர் அதிபர் சுந்தரின் பெற்றோரிடம் “சுந்தருக்கு பச்சை நிறம் எது, நீல நிறம் எது என்று கூடத் தெரியவில்லை. அவனை பாலர் வகுப்பில் தான் சேர்க்க முடியும்” என்று கூறினார்.



சுந்தரின் பெற்றோர்கள், சுந்தர் ஒரு புத்திசாலி என்றும் அவனின் வயதின்படி அவன் இரண்டாம் வகுப்பில் படிப்பான் என்றும் நினைத்திருந்தனர். படிக்காத அவர்கள், அதிபரிடம் தலை குனிந்து பேசாது இருந்தார்கள்.




கனத்த மனதுடன் சுந்தரை பாலர் வகுப்பிற்கு அனுப்பிவைத்தனர். அன்று சுந்தர் அழுதே நாளை முடித்தான்.




நாட்கள் ஓடின.
சுந்தர்
பெற்றோரின்
அன்பும்
அரவணைப்புட
-னும் வளர்ந்து
ஒரு சிறந்த
மாணவனாக
விளங்கினான்.

உயர்தர
பரீட்சையில்
மருத்துவ
துறையில் கல்வி
தொடர
சித்தியும்
அடைந்தான்.





மருத்துவக் கல்லூரியில், கண்களைப் பற்றி படிக்கும்போது பச்சை-நீல நிறப்பார்வைக் குறைபாடுபற்றி அறியவந்தான்.



இக்குறைபாடு உள்ளவர்களுக்கு பச்சையும் நீலமும் மாறுபட்டு தென்படும் என்பதையும் அறிந்தான்**. மேலும் இதனால் கல்வி கற்கும் ஆற்றல் பாதிக்கபடாது என்றும் புரிந்து கொண்டான்.

***சுந்தருக்குள்ள நிறப்பார்வைக் குறைபாடு ட்ரைடனோபியா (Tritanopia) என்று அழைக்கப்படும்.*


*சாதாரண கண்களுக்கு நிறங்கள் தென்படும் விதம்*



*சுந்தரின் கண்களுக்கு நிறங்கள் தென்படும் விதம்*



சுந்தருக்கு,
சிறுபிராயத்தில் தான்
நீலத்தையும்
பச்சையையும் மாறிக்
கூறியதன் காரணம்
இப்போது
புரிந்ததுவிட்டது.





ஆனால்,
ஆண்டாள் குளம்
அதிபருக்கும்,
ஆசிரியர்களுக்கும் இந்த
அறிவு அன்று
இருக்கவில்லை.
அன்று அவனுக்கு வந்த
பின்னடைவைக் கடந்து
ஒரு வெற்றியாளனாக
சுந்தர் நின்றான்.



வைத்தியர்
சுந்தர்
பாடசாலையை
வந்தடைந்தார்;
பழைய
நினைவுகளிருந்-
து மீண்டார்.

மோட்டார் வாகனத்தை நிறுத்திவிட்டு
நுழைவாயிலை நோக்கி நடந்தார்.

அங்கு
அவருக்கு ஒரு
பெரிய
வரவேற்ப்பு
காத்திருந்தது.

**முற்றும்**



**Publisher:** STEM-Kalvi Charity
**E-mail**: STEMkalvi@gmail.com
**Web:** WWW.STEMkalvi.org
**Writer :**Anusha Sritharan, Australia

**Book:** Pachchaiyaa? Neelamaa?
(பச்சையா ? நீலமா?)
**Language: Tamil**

**Reading Level**: 4.1

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director, STEM-Kalvi

This book is part of the **'1000 Reading Books'** initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022

**Licence:** This license enables reusers to distribute, remix, adapt, and build upon the material in any medium or format, so long as attribution is given to the creator. The license allows for commercial use.

CC BY SA



**About the writer:** Anusha was born in Colombo, Sri Lanka, and currently resides in Melbourne, Australia. She holds a PhD in Brain Imaging from Monash University in Melbourne, Australia. Currently, she is developing a math series to illustrate the broader applications of mathematics beyond traditional classrooms. She expresses her thanks to STEM KALVI for the opportunity to contribute to literacy development as part of their 1000 Reading Book Initiative and is thankful to Saravanamuthu Rajacon for his support in all her writing endeavours.

| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics